# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2325 - 2023 මාර්තු මස 24 වැනි සිකුරාදා - 2023.03.24

*2325 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 36 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023 மாச்சு மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

35 - B 082439- 353 (2023/03)

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

W.D. வீரசிங்க ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைகொண்ட மேற்குறித்த இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வசதிகள் முகாமைத்துவத்தின் தொழிலாண்மை தொடர்பில் தொழிலாண்மையின் அக்கறை, அந்தஸ்து, நலன்புரி, உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளையும் பொது அக்கறையினையும் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்;

(ஆ) வசதிகள் முகாமைத்துவம் மற்றும் தொடர்புபட்டவிடயங்கள் பற்றிய அறிவினைப் பரப்பும் பொருட்டு விரிவுரைகளையும் கலந்துரையாடல்களையும் ஒழுங்கு செய்தலும் புத்தகங்களையும் ஏனைய உபகரணங்களையும் ஒழுங்கு செய்தலும்;

(இ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகள் மற்றும் தகமையீனங்களையும் மற்றும் நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கான தொழிலாண்மைசார் நடத்தை பற்றிய நியமங்களையும் அவற்றுக்கு அமைந்தொழுகுவதனை உறுதிப்படுத்துதலை விதித்துரைத்தல்,

பிறவும் ,

W.D. வீரசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்றம்,
அம்பாறை.

03- 566

---

## தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

காமினி லொக்குகே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "தஹம் செவன சிகித்தோ சிறுவர் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலமாகும் " என்று குறிப்பிடப்படும் வரைவு ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆலோசிக்கப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

சட்டமூலத்தின் நோக்கமானது கீழ் குறிப்பிடப்பட்ட பொது குறிக்கோள்களைக் கொண்டதான குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதாகும்.

(1) பாலர் பாடசாலைப் பிள்ளைகள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை பல்வேறு மொழிகள் உள்ளடங்கிய கல்வியை பெற்றுக் கொடுத்தல்;

(2) எல்லா மதங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஆன்மீக திறன்களை மேம்படுத்தல்,

(3) விசேட தேவையுடைய மற்றும் ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு முறையான போஷாக்கு வழங்கும் முறை ஒன்றை தயாரித்தல்.

காமினி லொக்குகே ,
பாராளுமன்ற உறுப்பினர்.

கொழும்பு மாவட்ட பாராளுமன்றம்,
பிலியந்தளை.

03- 572

## "என் கனவு யாழ்" மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சாரதீ துஷ்மந்த ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் " 'என் கனவு யாழ்' மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) கல்வித்துறைக்கு முதலிடம் அளித்து அதன் வளர்ச்சிக்காக மக்களுக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல்;

(ஆ) விவசாயம், மீன்பிடி, கால்நடை ஆகிய துறைகளின் மீளெழுச்சிக்காக கைகொடுத்தல்; மற்றும்

(இ) உடல் , உள நலன்மிக்க ஆரோக்கியமான சமூகமொன்றினை கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,

பிறவும்.

சாரதீ துஷ்மந்த,
பாராளுமன்ற உறுப்பினர்.

03- 574